நாமக்கல் மாவட்டக் கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் :திருமதி.கி.சுப்புலட்சுமி.பி.எஸ்.சி.,

---

செ.மு.ந.க.எண்.1037/2019/அ2 நாள்: .08.2020.

பொருள்:பணியமைப்பு - கருவூலம் மற்றும் கணக்குத்துறை - நாமக்கல் மாவட்டக் கருவூல அலகு - திருமதி.எம்.மகாலட்சுமிஎன்பவர் தமிழ்நாடுஅரசுபணியாளர் தேர்வாணையத்தின் 2015-2016, 2016-2017&2017-2018-ஆம் ஆண்டுதொகுதிIV –இனமூலம் தட்டச்சராகதெரிவு - நாமக்கல் மாவட்டக் கருவூல அலகில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:1.செயலர்/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-03 அவர்களின் கடித எண்.4692/PSD-A/2018 நாள்:22.02.2018.
2.முதன்மை செயலர்/ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை சென்னை-35 அவர்களின் செ.மு.ந.க.எண். 7725/2019/சி3 நாள்:01.03.2019.
3.இவ்வலுவலக செ.மு.ந.க.எண்.1037/2019/அ2 நாள்:06.03.2019.
4.அரசாணை(நிலை)எண்.191 பொதுத்துறை நாள்:01.02.1962.
5.இவ்வலுவலக ந.க.எண்.1037/2019/அ2 நாள்:11.04.2019.
6.இணை இயக்குநர், மாநிலப் பள்ளித் தேர்வுகள் குழுமம் அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை-06 அவர்களின் கடித ஓ.மு.எண்.058540/வி4/2019 நாள்:06.07.2019.
7.தலைவர், தேர்வு வாரியம், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களின் ஓ.மு.எண்.119707/டி3/2019 நாள்:31.07.2019.
8. தலைவர், தேர்வு வாரியம், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களின் ஓ.மு.எண்.135002/டி3/2019 நாள்: .07.2020.

***

பார்வை 1-இல் காணும் கடிதத்தின்படி திருமதி.எம்.மகாலட்சுமி என்பவர் 2015-2016, 2016-2017 &2017-2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி-IV நேரடி போட்டி தேர்வின் மூலம் தட்டச்சராக தெரிவு பெற்று கருவூலம் மற்றும் கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளார். பார்வை 2-இல் காணும் செயல்முறை

...2...

ஆணையின்படி நாமக்கல் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தனியர் பார்வை 3-இல் காணும் செயல்முறை ஆணையின்படி 06.03.2019 முற்பகல் மாவட்டக் கருவூலம் நாமக்கல்லில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 5-இல் காணும் கடிதத்தின்படி தனியருக்கு பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் உண்மைதன்மை கோரி இணை இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து தனியரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் உண்மை தன்மை வாய்ந்தவை என பார்வை 6-இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவேபார்வை 4-இல் காணும் அரசாணையின் படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

1.தனியர் பணியேற்ற நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிகாலத்தில் இரண்டாண்டு பணிகாலம் தகுதிகாண் பருவகாலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

2.தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் அரசு விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதுடன் அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்யவேண்டும்.

3.சென்னை உயர்நீதிமன்றம்/சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளை ஆகியவற்றில் பணிவரன்முறை மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-IV 2015-2016, 2016-2017 & 2017-2018 தெரிவு சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவின் படியும், பின்நாளில் அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு ஏற்ப இவ்வாணை மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

கருவூல அலுவலர்,
நாமக்கல்.

பெறுநர்
திருமதி.எம்.மகாலட்சுமி,
தட்டச்சர்,
மாவட்டக் கருவூலம், நாமக்கல்.

28/08/2020

நகல்:
1.கூடுதல் கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், நாமக்கல் - மேஜைக்கு.
2.உதவி கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், நாமக்கல் - மேஜைக்கு.
3.இருப்பு கோப்பு அ1/அ2